தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 16, பவ—திருவள்ளுவர் ஆண்டு 2025
1994, ஏப்ரல் 29, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்."

அரிய பயன்மிகு பொருள்களை ஆராய்ந்தறியவல்ல அறிவினை உடையோர், பயன் இல்லாத சொற்களை ஒருபோதும் சொல்ல மாட்டார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

வினாக்கள்-விடைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 441 திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

441—

தமிழக வழக்கறிஞர்கள் நல நிதித் தொகையை அதிகரித்தல்

*** 21702—திரு.ஆர். சிங்காரம்:**

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக வழக்கறிஞர்களின் நலநிதித் தொகையை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1994 ஏப்ரல் 29

தமிழக வழக்கறிஞர்களின் நல நிதித் தொகையை - கார்பஸ் ஆப் தி பண்ட்— அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இல்லையென்று பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் வழக்கறிஞர் நல நிதித் தொகையாக ஒரு வழக்கறிஞர் இறப்பாரேயானால் அவருக்கு அதிகபட்சமாக 60 ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்காக ஒரு சட்டத் திருத்தம் இங்கே கொண்டு வந்து, இப்போழுது இருக்கக்கூடிய சட்டப்படி 60 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. தமிழக வழக்கறிஞர்கள் இன்று 90 சதவிகிதம் பேர் வறுமையிலே வாடி வாழ வழி இன்றி தவித்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே ஒருவர் இறந்துவிடுவாரானால் இந்த 60 ஆயிரம் ரூபாய் என்பது இந்த விலைவாசி ஏறியிருக்கிற இந்தக் காலக் கட்டத்தில் போதாமல் இருக்கிறது. ஏற்கெனவே பார் கவுன்சில் ஒரு லட்சம் ரூபாயை ஒரு வழக்கறிஞர் இறப்பாரானால் கொடுக்கலாம் என்று ஒரு புரப்போசலை அரசுக்கு அனுப்பிருக்கிறது. ஒரு ரூபாய்க்கு அந்த நல நிதி ஸ்டாம்ப் ஒட்டிக்கொண்டிருந்த நீதிமன்றத்தில் இப்போது 2 ரூபாய் ஸ்டாம்பை ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது பார் கவுன்சிலில் பணமும் அதிகமாக இருக்கிறது. இந்த நேரத்தில் நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் கருணையோடு ஏற்கெனவே அவர்கள் அரசுக்கு அனுப்பி இருக்கிற புரப்போசலை ஏற்று ஒரு வழக்கறிஞர் இறந்தால் கொடுப்பதற்கான நல நிதித் தொகையை 1 லட்சம் என்று உயர்த்தித் தருவதற்கு ஆவன செய்வாரா? அரசாங்கம் ஏற்கெனவே இந்த நல நிதிக்காக ஏதாவது பணத்தை அரசாங்கத்தின் தொகுப்பாக கொடுத்திருக்கிறதா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, தமிழ்நாடு பார் கவுன்சில் குடும்ப நலத் திட்ட நிதியை 60 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்த, அதற்காக வழக்கறிஞர் நல நிதி வில்லையை- அட்வகேட்ஸ் வெல்பேர் பண்ட் ஸ்டாம்பை, 2 ரூபாயிலிருந்து 5 ரூபாயாக உயர்த்துவதற்கு சட்டத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வர அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. இதற்காக பார் கவுன்சில் அளித்துள்ள விளக்கங்களை அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது. இரண்டாவது தகவல், இந்த வழக்கறிஞர்களுடைய நிதிக்காக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை, வழக்கறிஞர்கள் சந்திக்கிறபொழுது ஏதாவது நிதி வழங்க

1994 ஏப்ரல் 29]

வேண்டுமென்று கேட்டபொழுது, அவர்கள் பெரு மனது வைத்து 5 லட்சம் ரூபாய் மானியமாக வழக்கறிஞர்களுடைய நிதிக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்விதான். குறுக்கே வந்தவர்களுக்கு இரண்டாவது கேள்விக்கு அனுமதி இல்லை. திரு. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்களுக்கு நிதி கொடுப்பதில் சட்டத்தில் இடமில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மிகவும் நலிவடைந்து, மிகவும் வயதான பிறகு அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை கணக்கில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுக்கு ஒரு லட்சமாவது ஒட்டுமொத்தமான நிதியை அளிக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, ஒரு லட்சம் ரூபாய் திட்டத்தை அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. விரைவில் அதை அறிவிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. எஸ். அமர்நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பயிற்சி படித்து முடித்த உடனே, அந்தந்தப் பகுதிகளில் உள்ள மாவட்ட நீதிமன்றங்களிலே வழக்கறிஞர்களாகப் பயிற்சி செய்கிறார்கள். அவர்கள் பயிற்சி செய்கின்ற காலத்திலே அல்லது வழக்கறிஞர் தொழிலில் இருந்து ஓய்வு பெறும் நேரத்திலே அவர்களுக்கு ஒரு நல நிதித் தொகை வழங்க வேண்டுமென்று தமிழகத்திலே உள்ள வழக்கறிஞர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமான கோரிக்கையை விடுத்துள்ளார்கள். வழங்கப்பட இருக்கின்ற அந்த 60 ஆயிரம் ரூபாய் தொகையை ஒரு லட்சமாகக் கூட்ட வேண்டுமென்று எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். அந்த மாவட்டத்தில் பயிற்சி செய்கின்ற வழக்கறிஞர்கள் அந்த நல நிதிக்கு பங்கு செலுத்தும் வகையில் அவர்கள் மாதாமாதம் ஒரு தொகையைக் கட்டி, அரசும் ஒரு பங்குத் தொகையாக அந்தந்த வழக்கறிஞர்கள் பெயரிலே கட்டி, வழக்கறிஞர்கள் செலுத்துகின்ற தொகையையும், அரசு செலுத்துகின்ற தொகையையும் சேர்த்து, இந்த அரசு ஒரு லட்சமாகக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1994 ஏப்ரல் 29

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அரசு கொடுப்பதல்ல. வழக்கறிஞர்கள் ஒவ்வொரு வழக்குக்கும் இரண்டு ரூபாய் ஸ்டாம்ப் ஒட்டி, அதன்மூலம் கிடைக்கும் பணத்தை வைத்துக்கொண்டு, இப்போது 60,000 ரூபாய் கொடுக்கிறார்கள். அதை ஒரு இலட்சமாக ஆக்க வேண்டுமென்று வழக்கறிஞர்கள் சங்கம் — பார் கவுன்சில் — கேட்டிருக்கிறது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதற்கு நல்ல முடிவெடுப்பார்கள். ஆனால் அதற்கு மத்தியிலே என்னைப் பொறுத்தவரையில் ஒரு வேண்டுகோள். இங்கே பேசிய வழக்கறிஞர்கள், வழக்கறிஞர்களுடைய குறைகளை மட்டும் சொன்னார்கள். அவர்கள் சில கடமைகளையும் செய்ய வேண்டும். 25,000 வழக்கறிஞர்கள் தமிழகத்திலே இருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டத்தில் 7100 பேர்கள்தான் இன்றைக்கு உறுப்பினர்களாக ஆகியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர், வழக்கறிஞர், திரு. ஞானசேகரன் அவர்களை கேட்டுக்கொள்வது, நீங்கள் மிகுதியாக இருக்கிறவர்களையும் உறுப்பினர்களாக்கினால் 1 இலட்சம் அல்ல, 2 இலட்சம் அல்ல, 3 இலட்சம் ரூபாய் கூடக் கொடுக்கலாம். உங்களுக்கு நிதி சேரும். இன்றைக்கு இருக்கின்ற வழக்கறிஞர்களை எல்லாம் உறுப்பினர்களாக்கினால் அவர்கள் சந்தா செலுத்துவார்கள். ஸ்டாம்ப் ஃபீ செலுத்துவார்கள். அதுமட்டுமல்ல, இன்றைக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 5 இலட்சம் ரூபாயை அந்த 'கார்பஸ் பன்ட்'-க்கு மானியமாகக் கொடுத்திருக்கிறார்கள். எனவே 25,000 வழக்கறிஞர்களில் இன்னும் 18,000 பேர்கள் உறுப்பினர்கள் ஆகாமல் இருந்து கொண்டு, 1 இலட்சமாக ஆக்க வேண்டுமென்று சொல்லுகிறபோது, தயவு செய்து முதலிலே அவர்களை உறுப்பினர்களாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா. எண் 442, திரு. ஆர். தங்கராஜ், மாண்புமிகு உணவு அமைச்சர்.

442—

ஆண்டிமடம் புக்குழி கிராமத்திற்கு நியாய விலைக்கடை அமைத்தல்

13025—திரு. ஆர் தங்கராஜ்:

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, புக்குழி கிராமத்திற்கு ஒரு நியாய விலைக்கடை அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?